REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆடி 9உ திங்கள் (25—7—55) ★ ★ வெளியீடு: ஆடி 10உ செவ்வாய் (26—7—55) [இதழ் 35

கோவா—இந்தியா இரயில் போக்குவரத்து துண்டிப்பு!

புனா, ஜூலை 24—

இன்று நள்ளிரவு முதல் இந்தியா—கோவா இரயில் போக்குவரத்து பூராவும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதன் விளைவாக, தென் இரயில்வேயினால் இந்தியாவிலிருந்து கோவாவுக்குப் பிரயாணிகள், சாமான்கள் போக்குவரத்து அறவே நின்றுவிட்டது. திடீரென போக்குவரத்தை அறவே நிறுத்துவதற்கான காரணம் எதையும் இரயில்வே அதிகாரிகள் கூற மறுத்துவிட்டனர்.

'தென்னகத்தின் கலாச்சாரம் ஒன்றேயாகும்'

'பேசும் மொழி எதுவானாலும் தெற்கில் கலாச்சார ஒற்றுமை இருக்கிறது'

'திருவாங்கூர் முதல் பெராம்பூர் வரையில் இவ்வொற்றுமையைக் காணலாம்'

'இவ்வொற்றுமையைக் காப்பாற்றி வர வேண்டியது தென்னகத்தார் கடமையாகும்'

ஆந்திர முதலமைச்சர் கோபாலர் கருத்தும் கோரிக்கையும்

சென்னை, ஜூலை 24—

"தென்னகத்தில், கலாச்சாரக் கூட்டும், பொதுவான இசைத்துறை ஒற்றுமையும், வடக்கே பேர்காம்பூர் முதற் கொண்டு, தெற்கே திருவனந்தபுரம் வரையில் இருந்து வருகிறது; எத்தகைய மொழி வேற்றுமைகள் இருந்த போதிலும், இவ்வொற்றுமை இருப்பதை ஒவ்வொருவராலும் காணமுடிகிறது."

"தென்னகத்து மக்கள், தமிழையோ, தெலுங்கையோ-எதைப் பேசுபவர்களாக இருந்தாலும் அவர்களுடைய கலாச்சாரம் ஒன்றேயாகும்; அக்கலாச்சார ஒருமைப்பாட்டைப் பேணி வரவேண்டியது தென்னக மக்களின் கடமையாகும்."

—இவ்வாறு, திருவல்லிக்கேணி கலாச்சார கலைக்கூடத்தின் இரண்டாவது ஆண்டு விழாவிற்குத் தலைமை வகித்தபொழுது, ஆந்திர முதலமைச்சர் கோபாலர் குறிப்பிட்டுள்ளார்.

திராவிட மொழி இலக்கியங்கள்

பரப்புவதற்கு நிறுவனம்!

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய தென்னாட்டு மொழி இலக்கிய புத்தகங்கள் ஏராளமான மக்களுக்குக் கிடைக்கும்படி, செய்து இலக்கியங்களைப் பரப்ப தென் இந்திய புத்தக டிரஸ்ட் என்ற நிறுவனம் கூடிய சீக்கிரம் இங்கு ஆரம்பிக்கப்படும்.

இந்த நிறுவனத்தில், சென்னை, ஆந்திரா, திருவாங்கூர்-கொச்சி, அண்ணாமலை, ஐதராபாத், வெங்கடேசுவரா ஆகிய பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களும், உத்தியோகத் தொடர்பற்ற சிலரும் இருப்பார்கள். தென்னாட்டில் குறைந்த விலையில் விரிவாகப் புத்தகங்களை வினியோகிப்பதற்கான ஏற்பாட்டையும் இந்த நிறுவனம் செய்யும்.

'அரிசி குத்தும் இயந்திர ஒழிப்பால் அரிசி ஏற்றுமதி பாதிக்கும்'

'விவசாயிகளும் அதனால் துன்பத்திற்குள்ளாவர்

'விசாரணைக் குழு முடிவை செயலாற்றக் கூடாது'

பம்பாய், ஜூலை 21—

"கைக்குத்தல் முறையில் தயாரிக்கப்பட்ட உயர்ந்த ரக அரிசியுங்கூட, அதன் கவர்ச்சியற்ற தன்மையினாலும், மிகுதியான உற்பத்தி செலவினாலும், வெளிநாடுகளில் மற்ற நாட்டு அரிசியுடன் ஏற்படும் வியாபாரப் போட்டியில் தலைகாட்ட முடியாது; அதுவுமன்றி கைக்குத்தல் ஏற்பாட்டால் விவசாயிகளும் துன்பத்திற்குள்ளாவர்—அதாவது, நெல் வரவின் பெருக்கத்தை ஈடு செய்யும் வகையில் போதிய கைக்குத்தல் வசதி இல்லாததால் விவசாயிகளும் பாதகமடைவர்."

அரிசி இயந்திர விசாரணைக்குழுவின் முடிவை எதிர்த்து, மேற்கண்டவாறு, பம்பாய் அரிசி வியாபார சங்கம் கருத்தறிவித்துள்ளது.

மேற்படி விசாரணைக் குழுவின் முடிவுகளை இந்தியப் பேரரசு நடைமுறைக்குக் கொண்டு வருமானாலும், நீண்ட கால அரிசி ஏற்றுமதியில் இருந்துவந்த வெளிநாட்டுச் சந்தைகளை, இந்தியா கண்டிப்பாக இழக்கவேண்டி ஏற்பட்டுவிடும்.

"அடுத்த ஐந்தாண்டுகளுக்குள்ளாக, நெல் குத்தும் இயந்திர சாதனங்களை எல்லாம் கூட்டுறவு முறையில் இயங்கும் கைக்குத்தல் சாதனங்களாக மாற்றி அமைத்துவிட வேண்டும்,"

என்று, மேற்படி குழு தனது அறிக்கையில் சிபாரிசு செய்திருக்கிறது.

இச்சிபாரிசை செயலாற்றக் கூடாது என, அரிசி வியாபார சங்கம், இந்தியப் பேரரசின் உணவு மந்திரி ஜெயினைக் கேட்டுக் கொண்டு இருக்கிறது.

1951-ல் எடுக்கப்பட்ட கணக்குப்படி, இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும் 2 லட்சம் மக்களே கைக்குத்தல் அரிசித் தொழிலில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

பண்டிதரின் 'பஞ்சாமிர்தம்' துர்நாற்றமடிக்கிறது!

எகிப்து போர் அமைச்சரின் பரணி

கெய்ரோ, ஜூலை 25—

"இஸ்ரேல் பிரச்சினையில், எகிப்து, சமாதானத்தை நிலைநாட்ட பலாத்காரத்தை உபயோகிக்கவும்கூடத் தயாராக இருக்கிறது;

"நமது பாலைவனம், படையெடுப்பாளர்களின் சுடுகாடாக அமையும்; நாம் அவர்களின் எல்லைக்கும்கூட யுத்தத்தை இழுத்துச் செல்வோம்; அவர்களுடைய நோக்கங்களில் சமாதானமும் ஒன்றுயிராவிட்டால்—யுத்தத்தை அவர்கள் நம் மீது திணிப்பார்களானால், சமாதானத்தை நிலைநாட்ட அங்கு நாம் பலாத்காரத்தையும் பயன்படுத்துவோம்,"

என்று எகிப்திய யுத்த இலாகா மந்திரியும் இராணுவ தளபதியுமான மேஜர் ஜெனரல் அப்டெல் ஹக்கீம் அமெர் குறிப்பிட்டிருக்கிறார்.

எகிப்தில், முடியாட்சி ஒழிப்பின் மூன்றாம் ஆண்டு விழாவை ஒட்டி நடைபெற்ற இராணுவ அணிவகுப்பில் பேசியபோது அவர், மேலும், கடந்த பிப்ரவரியில் காஜா பகுதியில் இஸ்ரேலியர் நடத்திய தாக்குதலை வன்மையாகக் கண்டித்தார்.

மேலும் பிரதமரான கர்னல் அப்டெல் நாசர், இனிவரும் தாக்குதல்களை எதிர்த்து முறியடிக்கவும், ஆக்கிரமிப்புக்குப் பதில் ஆக்கிரமிப்பு நடத்துமாறு உத்தரவிட்டிருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆகஸ்டு 1-ந் தேதி முதல்

மணியின்றி சைக்கிள் ஓட்டினால் ரூ. 50 அபராதமாம்!

"ஆகஸ்டு 1-ந் தேதி முதல், நகரில், மணி இல்லாமல் சைக்கிள் ஓட்டிச் சென்றால் ரூ.50 அபராதம் விதிக்கப்படும்,"

என்று, ஆமதாபாத் மாவட்ட மாஜிஸ்திரேட், சைக்கிள் ஓட்டிச் செல்பவர்களுக்கு எச்சரிக்கை செய்துள்ளார். 1-லட்சத்திற்கும் அதிகமாக, நகரில், சைக்கிள் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாம்.

'கலாச்சார ஒற்றுமை அடிப்படையில்தான் அரசியல் ஒற்றுமை ஏற்பட முடியும்'

வட மொழி கல்லூரி வெள்ளி விழாவில் வட மொழி வழி வந்தவர் தந்த விளக்கம்!

"அரசியல் ஐக்கியம் ஏற்படுவதற்கு (ஏற்கனவே அரசியல் ஐக்கியம் இல்லை என்பது தொனிக்கிறது) கலாச்சார ஐக்கியம் முதலில் அவசியம்;

"சமஸ்கிருதத்தின் மூலமே இந்தியா கலாச்சார ஒற்றுமையைக் காண முடியும். (இப்போது இந்தியாவில் கலாச்சார ஐக்கியமும் இல்லை என்பதும் தொக்கி நிற்கிறது.)

"கடந்த காலத்தில் இடையறாமல் கலாச்சாரம், இலக்கியம், மதம் முதலிய பரம்பரை சம்பிரதாயங்களை வழங்கிவந்துள்ளது சமஸ்கிருதமே!"

—என்று மைலாப்பூர் சவ மொழிக் கல்லூரியில் நடைபெற்ற சவ மொழிக் கழகத்தின் வெள்ளி விழாக் கொண்டாட்டங்களுக்குத் தலைமை வகித்துப் பேசிய தலைமை உயர் நீதிமன்ற நீதிபதி டி. எல். வெங்கட்ராம அய்யர் குறிப்பிட்டிருக்கிறார்.

"ஐந்தாண்டுத் திட்டங்களில், சவ மொழி வளர்ச்சிக்கு சர்க்கார் ஒரு திட்டம் வகுத்தால் நல்லது," என்றும் அவர் குறிப்பிட்டாராம்.

விழாவில் கே. பாலசுப்பிரமணிய அய்யர், கே. பாஷ்யம் அய்யங்கார், என். இரகுநாத அய்யர், வி. எஸ். வெங்கடராகவாச்சாரி, பாலசுப்பிரமணிய அய்யர் ஆகியோர் கலந்துகொண்டு பேசியிருக்கின்றனர்.

அலங்காரம் வேண்டாம்!

மாணவிகளுக்கு பஞ்சாப் சர்க்கார் உத்தரவு

லாகூர், ஜூலை 23—

நகைகள் அணிந்துகொண்டோ, பவுடர், உதட்டுச் சாயம் போன்ற அலங்காரங்களுடனோ மாணவிகள் பள்ளிக்கூடத்துக்கு வரக்கூடாது என்று பஞ்சாப் சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது. அக்டோபர் முதல் இது அமுலுக்கு வரும்.

அவர்கள் விருப்பம் போல் ஆடையலங்காரம் செய்துகொள்ளவும் முடியாது. பெண்கள் சிறுவர்களுக்கு உடுப்பு வகைகளையும் சர்க்கார் நிர்ணயித்திருக்கிறது.

மலபாருக்கு தொழில் திட்டக் குழு

மலபார் மாவட்டத்தில் தொழில் ஆலோசகர் பதவியை ரத்துச் செய்துவிட்டு, தொழில் திட்டக் குழு ஒன்றை சென்னை சர்க்கார் நியமித்திருக்கிறது.

சுதந்திர நாகர்கள் மீது இந்திய இராணுவ போலீஸ் தாக்குதல்!

பர்மாவில் நாகர்கள் நுழைவதைத் தடுக்க பர்மா இராணுவம்

நாகர் இன மக்களின் கிளர்ச்சியில் 'பாதிக்கப்பட்ட' பகுதிகளில், கிளர்ச்சியாளர்களின் சட்டபூர்வமற்ற செயலை ஒடுக்க இந்திய இராணுவப் போலீசாருடன், பர்மிய இராணுவமும் ஒத்துழைத்து வருவதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

இந்திய எல்லையிலிருக்கும் நாகர்களின் கிளர்ச்சி பர்மாவுக்கும் பரவாதிருக்கும்பொருட்டு, பர்மியத் துருப்புகள், இந்திய—பர்மா எல்லையில் அவசியமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதில் முனைந்துள்ளனவாம்!

கைத்தறித் தொழில் அபிவிருத்தி

ஆறு மாநிலங்களுக்கு ரூ. 59 - லட்சம் நிதி உதவி

கைத்தறித் தொழிலின் அபிவிருத்திக்காக ஆறு மாநிலங்களுக்குக் கடனாகவும், சகாயத் தொகையாகவும் மொத்தம் ரூ. 59 லட்சத்திற்கு மேல் மத்திய ஆட்சியினர் நிதி உதவி வழங்கியிருக்கின்றனர்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 25—7—'55 திங்கள்

'டில்லி தேவதை'களின் மனப்பாங்கு!

காளா வெங்கிடராவ் ஆந்திர மாநில அரசாங்கத்தில் அமைச்சராவார். சில நாளைக்கு முன்பு அவர் சென்னை நகருக்கு வந்திருந்தார். அது சமயம் அவரைப் பாராட்டி வரவேற்றது, சென்னை நகர ஆந்திர வர்த்தக சபை.

அப்பாராட்டு மனமகிழ்ச்சியில் பூரிப்புடன் பேச வேண்டியதற்குப் பதிலாக, மருட்சி கொண்டவர்போல் பேசியிருக்கிறார். அவருடைய பேச்சில், ஆந்திர மாநிலம் எதிர்காலத்தில் தொழில் மயமாக வேண்டும் என்பதில் அவருக்குள்ள ஆவலும், அப்பெரும் விருப்பத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியுமா என்பதில் அவருக்குள்ள ஐயப்பாடும் விளக்கமாகத் தெரிகின்றன.

ஆந்திர மாநிலம் தொழில்மயமாக்கப்படுவதில் வெற்றி கிட்டுமோ கிட்டாதோ என ஐயப்படுவதோடு மட்டும் காளா நின்றுவிடாது, அத்தகைய ஐயப்பாடு தனக்கு ஏன் இருக்கிறது என்பதற்குரிய விளக்கத்தையும் விரிவாகவும் தெளிவாகவும் கூறியும் உள்ளார்.

அதாவது, போதிய மூலதனமும், மேலும் வரி விதிக்கும் வாய்ப்பும் ஆந்திராவில் இல்லாமல் இருப்பது, ஆந்திராவைத் தொழில் மயமாக்க வேண்டியதின் அவசியத்தையும், ஆந்திர மக்களின் விருப்பத்தையும் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாததற்குத் தடையாக இருக்கிறது என, காளா பெருங்கவலையுடன் குறிப்பிட்டிருக்கிறார். அந்தக் காரணத்தினாலேயே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்கு என, முதல் முதலாக எண்ணூறு கோடி ரூபாயில் உருவாக்கிய திட்டம், படிப்படியாகச் சிதைக்கப்பட்டு, இருநூறு கோடி ரூபாய்க்கு வந்திருக்கிறது என்றும், அத்தொகை அளவிலாவது திட்டம் செயலாற்றப்படுமானால் அதுவே பாராட்டுதற்குரியது என்றும் காளா வெங்கிடராவ் கவலையுடன் அறிவித்திருக்கிறார்.

அமைச்சரின் ஐயத்திற்கு மறுக்க முடியாத அடிப்படையான காரணம் இருந்தபோதிலும், மேற்குறிப்பிட்ட இரண்டு காரணங்களை மட்டுமே முக்கியமாகக்கொண்டு, ஆந்திரத்தைத் தொழில் மயமாக்குவது முடியாது போகுமோ என ஒருவரும் கவலை கொள்ளத் தேவையில்லை. அதிலும் அரசியல் சட்டப்படி இந்தியப் பேரரசின் அரவணைப்பில் இருக்கும் ஆந்திரம் போன்ற ஒரு மாநில அரசாங்கம் அஞ்சத் தேவையே கிடையாது.

இந்தியப் பேரரசிற்கும்—ஒரு மாநிலத்திற்கும், இந்திய அரசியல் சட்டத்தின்படி இருந்துவரும் உறவு முறையை மட்டுமே ஒருபொருட்டாகக் கொண்டு, நிலைமையை ஆராய்ந்து பார்க்கிறவர்கள், மேற்குறிப்பிட்ட முடிவைத்தான் கூறுவர். ஆந்திராவில் வரி விதிக்க மேலும் வசதி இல்லாமல் போனால் என்ன, அப்பகுதியிலேயே மூலதனம் திரண்டில்லாமல் இருந்தால் என்ன, அப்பகுதியைத் தொழில் மயமாக்குவதற்கு இந்தியப் பேரரசு உதவியே தீரும்—அவ்வாறு உதவிபுரிய சட்டப்படி அது கட்டுப்பட்டும் இருக்கிறது என சட்ட நுணுக்கம் காட்டி சிலர் பேசவும் பேசுவர்.

சட்டப்படி இந்தியப் பேரரசிற்கும், ஆந்திர மாநிலத்திற்கும் இருக்கும் உறவு முறையையும், ஒரு மாநிலத்தின்பால் இந்தியப் பேரரசு சட்டப்படி காட்ட வேண்டிய கடமை உணர்வையும், மற்றவர்கள் தெரிந்திருப்பதைவிட ஆந்திர அமைச்சர் காளா வெங்கிடராவ் நன்கு தெரிந்திருப்பவரே யாவார். அனைத்தும் தெரிந்தவர்தான் கவல்கிறார்—ஆந்திராவைத் தொழில் மயமாக்குவது, ஆந்திர மக்கள் விருப்பப்படி முடியாமற் போகுமோ—என்று!

இந்தியப் பேரரசிற்கும்—ஆந்திர மாநிலத்துக்கும் சட்டப்படி இருந்துவரும் உறவு முறை ஆந்திராவைத் தொழில் துறையில் வாழ வைக்க உதவுவதைவிட, மற்றத் துறைகள் அனைத்திலும் வெகு முடுக்குடன்தான் செயல்பட்டு வருகிறது. ஆனால் தொழில் துறையில் மட்டும் அந்த முடுக்கு இருக்கவில்லை. பற்றுமில்லை! பாசமுமில்லை! கசப்புத்தான் உச்சம் பெற்று இருக்கிறது!

ஆந்திர மாநில அரசாங்கத்திற்கும்—இந்தியப் பேரரசிற்கும் சட்டப்படி இருந்துவரும் உறவு முறையைத் தெரிந்தவர்தான், ஆந்திரத்தை, ஆந்திர மக்களுக்கு வாழ்வளிக்கும் வகையில் தொழில் மயமாக்க முடியாது இருக்கிறதே எனச் சோகிக்கிறார் — சோகத்தைச் சொந்த மக்களிடம் கூறி மனச் சுமையை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளவும் முயற்சிக்கிறார்!

தன் அரவணைப்புக்குட்பட்ட மாநிலங்களை வளமுள்ளதாக்கும் கடமை சட்டப்படி இந்தியப் பேரரசிற்கு இருந்துங்கூட, ஆந்திர மக்களுக்கு இன்றியமையாதத் தொழில் வளங்களைத் தேடித் தர முடியாமல் இருக்கிறதே எனக் கண் பிசையும் காளா, அதற்குரிய அடிப்படைக் காரணத்தையும் கூறாமல் இல்லை. அம்முக்கிய அடிப்படைக் காரணத்தை ஒளிவு மறைவு இல்லாமல் அவரே விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்.

அதாவது, 'ஆகாயத்திலுள்ள கடவுளர்களும்,டெல்லியிலுள்ள தேவதைகளும் அருள்பாலிக்குமானால், ஆந்திராவில் ஒரு செயற்கை உரத் தொழிற்சாலை நிறுவப்படும்' - என்று! அமைச்சர் காளா வெங்கிட ராவ் அவர்கள்தான் இக்கருத்தை அறிவித்துள்ளார்.

ஆண்டவன் மனித உருவில் தான் செயல்படுகிறான் என்பது தத்துவப் பேராசிரியர்களின் பெருவழக்கு. அதன்படி காளாவின் தீவிர முயற்சியில் ஆண்டவன் அருள் செயல்படத்தான் செய்கிறது!

'டெல்லி தேவதைகளின் அருள் கிடைத்தால்'...! எனக் காளா கூறி இருப்பதிலிருந்து, 'அந்த அருள்' நிச்சயமாகக் கிடைக்குமென்பதில் அவருக்கே ஐயப்பாடாக இருக்கிறது என்பது விளக்கமாகிறது.

அவர், வெறும் அமைச்சராக மட்டும் இருப்பவரல்ல; அவர் ஏற்கனவே அகில இந்திய காங்கிரசின் செயலாளராகவும் இருந்திருப்பவர் ஆவார்!

அவர் குறிப்பிடும் 'டெல்லி தேவதை'களிடம், மற்றவர்களுக்கு இருந்தத் தொடர்பைக் காட்டிலும் காளாவிற்கு இருந்திருக்கிறது. பொதுவாக அத்தேவதைகளுடைய மனப்போக்கும், குறிப்பாகத் தென்னகம் பற்றியும், தென்னகத்தார் குறித்தும் அத்தேவதைகளுக்குள்ள மனப்போக்கும், மற்றவர்களுக்குத் தெரிந்திருப்பதைவிட காளா வெங்கிட ராவ் அவர்களுக்கு நன்கு தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்தும் இருக்கிறது; தெரிந்திருப்பவர்தான். தெரிந்திருப்பதினால்தான், 'டெல்லி தேவதைகள்' ஆதரவு, ஆந்திராவிற்குக் கிடைக்குமோ கிடைக்காதோ எனக் கவல்கிறார்—குழப்புகிறார்!

போதிய மூலதனம் இருந்தாலும், வரிவிதிக்கும் வாய்ப்பு வரைகடந்து இருந்தாலும், ஆந்திர மாநிலத்தை — தென்னகத்தைத் தொழில் மயமாக்கிவிட முடியாது — அதற்கு 'டெல்லி தேவதை'களின் அருள் கிடைத்தாகவேண்டும்!

இந்த உண்மைதான் காளாவின் சோகச் சொற்களில் மறைந்து கிடக்கிறது!

மூலதனமும், மக்களின் விருப்பமும் மட்டும் போதாது, தென்னிந்தியாவை — திராவிடத்தை வாழவைக்க; அதற்கு டெல்லி தேவதைகளின் அருள் —ஆதரவு கண்டிப்பாக இருந்தாகவேண்டும்!

இந்தியப் பேரரசின் அரவணைப்பினால் திராவிடம் பெற்றுவரும் இலாபம் இதுதான்!

இதை நாம் கூறவில்லை! ஆந்திர மாநில அமைச்சர் காளா வெங்கிடராவ், வெளிப்படையாகக் கூறியுள்ளார்! காளா வெங்கிடராவ், ஒரு காங்கிரஸ்காரர்—சாதாரண காங்கிரஸ்காரர் அல்ல—அகில இந்திய காங்கிரசின் செயலாளராக இருந்து, 'டெல்லி தேவதை'களின் நெஞ்சகத்தைத் துழவித் தெரிந்துகொண்டிருப்பவர்! கூறுகிறார், இம்மகத்தான உண்மையை!

அவர்களா அப்படி தீர்மானிக்கிறார்கள்?

திருச்சி, ஜூலை 20—

"அண்மையில் சென்னை சர்க்கார் வெளியிட்டு, பின்னர், 'மேலும் ஒட்ட வேண்டா'மென நிறுத்தி வைத்திருக்கிற தீண்டாமைக்குற்ற விளக்க சுவரொட்டிகளை, சர்க்கார் முழுவதுமாக, திரும்பப் பெற்றுவிட வேண்டு"மென்று கோரி திருச்சி மாவட்ட 'அரிஜனக் கமிட்டி'க் கூட்டம், முசிரியில், மாவட்ட அதிகாரி ஆர். எஸ். மலையப்பன் தலைமையில் நடைபெற்றபோது நிறைவேற்றப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

தீர்மானத்தை ஜி. மகாதேவன் கொண்டுவந்தார்.

எப்படி வராமல் போகும்?

இந்த சுவரொட்டிகளில் இரண்டு கட்டுகள் அனுப்பியுள்ளதாகத் தகவல் வந்தது என்றும், ஆனால் அது வந்து சேரவில்லை என்றும், அதற்குள் சர்க்கார், அதை ஒட்ட வேண்டாமென உத்திரவிட்டுவிட்டனர் என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நீர்ப்பாசனமும், மின்சார உற்பத்தியும்!

ஒரு அதிகாரபூர்வமான கண்ணோட்டம்

முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் 1951-ம் ஆண்டு மார்ச் திங்களில் ஆரம்பமானபோது, இந்தியாவில் நீர்ப்பாசன வசதி பெற்றிருந்த நிலத்தின் மொத்த பரப்பளவு சுமார் 5 கோடி ஏக்கர்; பொது நிலையங்களில் மொத்த மின்சார உற்பத்தி சக்தி 17 லட்சம் கிலோவாட்டுகள். முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வகுத்தபோது, திட்டக் குழு, அடுத்த 15 அல்லது 20 ஆண்டுகளுக்குள் நீர்ப்பாசன வசதி பெறும் நிலப்பரப்பை இருமடங்காக்கவும்—அதாவது, மேலும் 5 கோடி ஏக்கர் நிலத்துக்குப் பாசன வசதி கிடைக்கச் செய்யவும், அதிகப்படியாக 70 லட்சம் கிலோவாட் மின்சார சக்தி உற்பத்தி செய்யவும் உத்தேசித்தது.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மின்சாரத் திட்டங்களுக்கான மொத்தச் செலவு மதிப்பீடு ரூ. 734 கோடி; இதில், 1951-ம் ஆண்டு மார்ச் மாதம் முடிவு வரை ரூ. 144 கோடி செலவு செய்யப்பட்டிருக்கிறது. இத்திட்ட காலத்துக்குட்பட்ட ஐந்து ஆண்டுகளில், இந்தத் திட்டங்களுக்காக ரூ. 450 கோடி செலவிடப்படும்; பாக்கி ரூ 140 கோடி இக்காலத்துக்குப் பின்னர் செலவு செய்யப்படும். இத்திட்டங்களின் மூலம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி ஆண்டில் பாசன வசதி அதிகப்படியாக 88 லட்சம் ஏக்கராவுக்குக் கிடைத்திருக்குமென்றும், 11 லட்சம் கிலோவாட் மின்சாரம் அதிகப்படியாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கும் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. இத்திட்டங்கள் யாவும் முழுவதும் பூர்த்தி செய்யப்பட்டு பூரண அபிவிருத்தியடையும்போது, கூடுதலாகப் பாசன வசதி பெற்ற நிலப்பரப்பு 165 லட்சம் ஏக்கராவாகவும், அதிகப்படி மின்சார உற்பத்தி 19.3 லட்சம் கிலோவாட்டாகவும் இருக்கும்.

1952-ம் ஆண்டு திட்டம் வகுக்கப்பட்டதற்குப் பின்னர், இதில் மேலும் சில திட்டங்கள் சேர்க்கப்பட்டன; இவற்றில் முக்கியமானவைகளாவன:—

(1) 1953—54-ல் பற்றாக்குறைப் பிரதேசங்களின் நிரந்தர அபிவிருத்திக்காகப் பல நீர்ப்பாசன வேலைகள் செய்து முடிப்பதற்கான ரூ. 40 கோடி செலவாகும் திட்டம்;

(2) 1954—55-ல் சிறிய நகரங்களிலும், கிராமப் பிரதேசங்களிலும் வேலை வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கான சிறிய மின்சாரத் திட்டங்களுக்காக ரூ. 20 கோடி செலவழிக்க ஏற்பாடு.

திட்டத்தில் திருத்தியமைக்கப்பட்ட ஏற்பாட்டின்படி நீர்ப்பாசன மின்சாரத் திட்டங்களுக்காக ஒதுக்கிவைக்கப்பட்ட தொகை ரூ. 614 கோடி.

சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள், குழாய்க் கிணறுகள் ஆகியவற்றுக்காகத் தனியாக ரூ. 115 கோடி வேறு ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது; எனவே, பாசன வசதிக்காகவும், மின்சார சக்தி உற்பத்திக்காகவும் மொத்தம் ஒதுக்கிவைக்கப்பட்ட தொகை ரூ. 729 கோடி. திட்ட காலத்தில் வெள்ளக்கட்டுப்பாடு வேலைகளுக்காக ரூ. 16.5 கோடி மேலும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

1952-ம் ஆண்டின் முதல் திட்டத்தின்படி முதல் நான்கு ஆண்டுகளில்—அதாவது, 1951—55-க்குள் ரூ. 444 கோடி செலவு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. பின்னர் இந்த லட்சியச் செலவு அளவு ரூ. 468 கோடியாகத் திருத்தியமைக்கப்பட்டது. சமீப நிலைமையிலிருந்து பார்த்தால், திருத்தப்பட்ட திட்டப்படி ஒதுக்கிவைக்கப்பட்ட தொகையான ரூ 614 கோடியில், 1955-ம் ஆண்டு மார்ச் இறுதி வரையில் ரூ. 430 கோடி செலவு செய்யப்பட்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது; இது 70 சதவிகித சாதனையாகும். இதன்படி 1955—56-ம் ஆண்டில் செலவிடப்படுவதற்காக ரூ. 184 கோடி மிச்சம் விடப்பட்டிருக்கும்.

1951—54-ம் ஆண்டுகளுக்கு நீர்ப்பாசனம், மின்சாரத் திட்டங்களுக்காகச் செலவு செய்ய ரூ. 333 கோடி ஒதுக்கிவைக்கப்பட்டிருந்தபோதிலும், உண்மையில் ரூ. 291 கோடிதான் செலவிடப்பட்டிருக்கிறது. திருத்தியமைக்கப்பட்டபடி ஐந்து ஆண்டுகளுக்கான செலவு ரூ 614 கோடி. 1954—55-ல் ரூ 139 கோடி செலவழிக்கப்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

1955—56-ல் செலவு செய்யப்படுவதற்காகச் சுமார் ரூ. 184 கோடி மிச்சமாக இருக்கும். நடப்புத் திட்டத்தில், 1951—55ம் வருடத்துக்குட்பட்ட காலத்தில், நீர்ப்பாசன, மின்சாரத் திட்டங்களுக்காக ஆண்டுதோறும் செலவழிக்கப்பட்டிருக்கும் சராசரித் தொகை சுமார் ரூ. 108 கோடி. மேற்படி புள்ளி விவரங்களில், வெள்ளக்கட்டுப்பாட்டுத் திட்டச் செலவுகள் சேர்க்கப்படவில்லை.

1955-ம் ஆண்டு மார்ச் முடிவு வரை மின்சார சக்தி லட்சிய அளவான 8,75,000 கிலோவாட்டுக்குப் பதிலாக, அதிகப்படியான மின்சார உற்பத்தி சக்தி 7,05,000 கிலோவாட்டுகளுக்கு இருக்கக் கூடும்.

சர்க்கார் மின்சார உற்பத்தி நிலையங்களும், தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான மின்சார நிலையங்களுமாகச் சேர்ந்து நடப்புத் திட்ட காலத்தில் அதிகமாக 12 லட்சம் கிலோவாட் மின்சார சக்தியை உற்பத்தி செய்யக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாசன வசதி அதிகரிப்பு சம்பந்தத்தில், லட்சிய அளவான 57 லட்சம் ஏக்கராக்களுக்குப் பதிலாக, 1955-ம் ஆண்டு மார்ச்சு மாத முடிவுவரை அதிகப்படியாக 49 லட்சம் ஏகருக்கு நீர்ப்பாசன வசதி அளிக்கப்பட்டிருக்கும்.

நடப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள பெரிய, நடுத்தர நீர்ப்

(4-ம் பக்கம் பார்க்க)

‘மகாராஷ்டிர மொழி மாநிலமே வேண்டும்’

‘மற்ற முறையினால் தேச நலன் கெடும்’

மகாராஷ்டிர பிரதேச காங்கிரஸ் குழுவின் ஒருமனப்பட்ட கோரிக்கை

“மொழி வாரி அடிப்படையில் மாநிலங்கள் திருத்தி அமைக்கப்படுவதற்கு மாருக வேறெந்த முறைகளிலும் மாநிலங்கள் அமைக்கப்படுவது, தேசத்தின் நலனுக்குக் கேடுதலாகவே இருக்கும்; அவ்வாறு செய்யப்படுமோனால், எந்தக் குறிக்கோளுக்காக மாநிலப் புனரமைப்புக் குழு நிறுவப்பட்டதோ அந்த நோக்கத்தைத் தோற்கடிப்பதாகும்.”

“பம்பாய், ஐதராபாத், மத்தியப் பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களுடனும் இணைக்கப்பட்டுக் கிடக்கும் மகாராஷ்டிரம், ‘பம்பாயைத் தலைநகராகக் கொண்ட மகாராஷ்டிர மொழி பேசப்படும் ஒரு தனி மொழி மாநிலமாக அமைக்கப்பட வேண்டும்,’ என்று மாநில புனரமைப்புக் குழுவிடம் ஒரு மனதாகக் கேட்டுக் கொள்ளுகிறது,”

—இவ்வாறு, மொழிவாரி அடிப்படையில் மாநிலங்கள் அமைக்கப்படுவது குறித்து, பம்பாயில் நடைபெற்ற மகாராஷ்டிரப் பிரதேசக் காங்கிரசின் செயற்குழுக் கூட்டம் ஒன்றில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

மகாராஷ்டிரப் பிரதேச காங்கிரசின் தலைவர் தியோகிர்கார் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், பம்பாய் மாநில நிலவரி அமைச்சர் பி. எஸ். ஹிரே, சிவில் வினியோக, ஸ்தல ஸ்தாபன அமைச்சர் ஒய். பி. சவான் ஆகியோரும் கலந்துகொண்டு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளனர் என்று கூறப்பட்டிருக்கிறது.

இவர்களைத் தவிர, பம்பாய் மாநில பொதுவேலை இலாகா அமைச்சர், பின்தள்ளப்பட்ட வகுப்பு நல அமைச்சர், மதுவிலக்கு அமைச்சர், பம்பாய் சட்டசபைத் தலைவர் ஆகியோரும் கலந்து கொண்டுள்ளனர்.

“மொழி அடிப்படையையும், கலாச்சார அடிப்படையையுமே முக்கியமாகக்கொண்டு மாநிலங்கள் திருத்தி அமைக்கப்படுவதற்காகத்தான் மாநில புனரமைப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது; எனவே, மகாராஷ்டிரத்தின் இக்கோரிக்கை, காங்கிரசின் நெடுநோன் கொள்கையையும், குழு நியமனத்திற்கான முக்கிய அடிப்படைக் கொள்கையையும் ஒட்டியதுமாகவே இருக்கிறது;”

என்றும் அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

‘சௌராட்டிரம், பம்பாய் மாநிலத்துடன் இணைக்கப்பட வேண்டும்’ என்று சில சௌராஷ்டிர, குஜராத் காங்கிரஸ் தலைவர்களின் வேண்டுகோள் பற்றிக் குறிப்பிட்டு, அத்தீர்மானத்தில், ‘இதுபோன்ற தீர்மானமொன்று, 1950-ல் மேற்கொள்ளப்பட்டபோது, மகாராஷ்டிரத் தலைவர்கள் எல்லோரும் எதிர்த்தார்கள்; எனவே, அது உடனடியாகக் கைவிடப்பட்டது’ என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

“மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள் முடிவடையும் தருவாயில், சௌராஷ்டிர, குஜராத் காங்கிரஸ் தலைவர்களின் கருத்துக்கள், எல்லா வழிகளிலும் சந்தேகத்தையும் குழப்பத்தையுமே தருகிறது; எனவே, மகாராஷ்டிரத்தின் கோரிக்கைகள் திரும்பத் திரும்ப வலியுறுத்தப்பட வேண்டும்,” என்றும் அத்தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

“மகாராஷ்டிர மாநில மக்களில் யாராவது, எங்கேயாயினும் குடியேறத் தேவையற்றவர்கள்; அதே நேரத்தில் தற்போதைய மாநிலத்தின் நிர்வாக முறையையும் வேண்டாதவர்களாகவே இருக்கின்றனர்,” என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

★

எவ்விதத் தடையும் கிடையாதாம்!

“இந்தியாவின் நலனுக்குத் தேவையானதாகவும், நியாயமானதாகவும் இருக்கும் பட்சத்தில், சௌராஷ்டிரம், பம்பாய் மாநிலத்துடன் இணைக்கப்படுவதில் எவ்விதத் தடையும் கிடையாது,”

என்று, சௌராஷ்டிர மாநில சர்க்கார், மாநில புனரமைப்புக் குழுவிடம் கருத்தறிவித்துள்ளதாம்.

“பம்பாய் மாநிலம், ‘குஜராத்தி மொழிப் பிரதேசம்—சௌராஷ்டிரப் பிரதேசம்’ என, இரு பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டு திருத்தி அமைக்கப்படுமோனால், சௌராஷ்டிரம், அதன் அண்மையிலுள்ள குஜராத்தி பிரதேசங்களுடன் இணைக்கப்பட வேண்டும்; இதுபற்றி எந்தவித முடிவு மேற்கொள்ளப்பட்டாலும் தங்களுக்குக் கவலையில்லை,” என்றும் சௌராஷ்டிர சர்க்கார் குறிப்பிட்டுள்ளது.

விற்பனை வரியிலிருந்து விலக்கு

கைக்குத்தல் அரிசிக்கு சர்க்கார் தரும் சலுகை

கைக்குத்தல் அரிசிக்கு விற்பனை வரி விதிப்பிலிருந்து விலக்களிக்க சென்னை சர்க்கார் தீர்மானித்துள்ளதாக சுகாதார மந்திரி ஏ பி. ஷெட்டி அறிவித்திருக்கிறார்.

நகர மருத்துவ மனைகளுக்கு தற்போது கைக்குத்தல் அரிசி தரப்படுகிறது. வெளியூர் மருத்துவ மனைகளுக்கும் சிறிது சிறிதாக கைக்குத்தல் அரிசி சப்ளை செய்யப்படும் என்று மந்திரி கூறியிருக்கிறார்.

விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது, கைக்குத்தல் அரிசிக்கு சர்க்கார் ஊக்கமளிக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் ஒன்று என்றும் மந்திரி தெரிவித்திருக்கிறார்.

பி. சி. ஜி. மருத்துவ அதிகாரிகளுக்கு......

சென்னை சர்க்கார் உத்தரவு

பி. சி. ஜி. ஊசி குத்துவதற்கு முன் தீங்கு பயக்காதவாறு முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், காசநோய் பற்றிய பரிசோதனைகளுக்கு ஆளாக்கப்படுவோர், பி. சி. ஜி. ஊசி போடப்படுவோர் பற்றிய பெயர், முகவரி முதலியனவற்றை குறிக்கும் குறிப்பேடு வைத்துக் கொள்ள வேண்டும் என்றும், பி. சி ஜி இயக்கத்தில் உள்ள அதிகாரிகளுக்கு உத்தரவுகள் அனுப்புமாறு மாநில சுகாதார மருத்துவ இலாகா அதிபர்களுக்கு சர்க்கார் உத்தரவிட்டுள்ளனராம்.

‘பி. சி. ஜி. ஊசி போட்டுக் கொண்டவர்களுக்கு ஏதேனும் கோளாறுகள் ஏற்படுமோனால், அவற்றை உள்ளூர் மருத்துவ மனைகள் கவனிக்கும்,’ என்றும் சர்க்கார் உத்தரவு கூறுகிறது.

இந்தியாவில் அணுசக்தி ஆராய்ச்சி

வடநாட்டில் நடைபெறும்!

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டப்படி, அணுசக்தி அபிவிருத்தி, அணுசக்தி ஆராய்ச்சி இவை மேற்கொள்ளப்படுவதற்கு தொழில் துறையில் உழைக்கக்கூடிய அணுசக்தி விஞ்ஞானிகளைப் பெறுவதே முக்கியமான அம்சமாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

1947-ல், இந்திய சர்க்கார், அணுசக்தி குழுவை நியமித்திருந்தது; பின்னர், 1954 ஆகஸ்டில் பிரதமரின் நேரடி கண்காணிப் பின்கீழ் இருக்கும் ‘இயங்கும் அணுசக்தி இலாகா’வாக மாற்றப்பட்டது; என்றாலும், அணுசக்தி பற்றிய ஆராய்ச்சியை மேற்கொள்ளும் திட்டம் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மேற்கொள்ளப்படவில்லை.

இரண்டாம் திட்டப்படி இந்த வேலை மேற்கொள்ளப்படவிருக்கிறது.

இதன்படி, பம்பாய், கல்கத்தா, டில்லி முதலிய இடங்களில் உள்ள அணு ஆராய்ச்சி நிலையங்களை அபிவிருத்தி செய்யவும் சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது.

இப்போது, பம்பாயில் உள்ள டாட்டா ஆராய்ச்சிக்கூடமும், கல்கத்தாவில் உள்ள அணு ஆராய்ச்சிக்கூடமும்தான் இந்த வேலையில் ஈடுபட்டிருக்கும் மிகப் பெரிய ஆராய்ச்சி நிலையங்களாகும்.

அணுசக்தி உலை அமைப்பதற்காக அமெரிக்காவிடம் சர்க்கார் பேச்சுவார்த்தைகள் நடத்திக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அண்மையில் ரஷ்யா சென்று விட்டுத் திரும்பியுள்ள பேராசிரியர் மெஹானந்த ஷா அறிவித்துள்ளபடி சோவியத் ரஷ்யாவும் கூட அணுசக்தி உலைகள் இந்தியாவில் அமைத்துத்தர தயாராக இருப்பதாகத் தெரிகிறது.

★

பம்பாயில் அணு உலை

அணுசக்தி முதலிய அடிப்படை ஆராய்ச்சிக்காக இந்தியா இப்போது ஆண்டுதோறும் செலவு செய்யும் தொகை, சுமார் ஐந்தே முக்கால் கோடி ரூபாயாகும். நாட்டின் வரவு-செலவுகளைப் பார்க்கும்போது, இது ஒரு முக்கியமான தொகை என்றே கருதப்படுகிறது. அணுசக்தியை ஆக்க முறையில் பயன்படுத்தும் வழித்துறைகளைக் காண்பதற்கென்றே தனி இலாகாவை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது.

இப்போது பம்பாய்க்கு அருகே, அணு உலை ஒன்றை இந்திய சர்க்கார் நிர்மாணிக்கிறது. அதில் உற்பத்தியாகும் பொருள்கள் மருத்துவம், விவசாயம் தொழில் துறை ஆராய்ச்சிக்கு உதவும். இந்த அணு உலைக்கு, அமெரிக்கா, அண்மையில் 10 டன் கன நீர் (ஹெவி வாட்டர்) அனுப்பியுள்ளது. ஆக்க வேலைக்கு அணுசக்தியைப் பயன்படுத்தும் துறையில் சர்வதேச ஒத்துழைப்பினால் ஏற்படும் நன்மைகளுக்கு இதனை விஞ்ஞானிகள் நல்ல உதாரணமாக எடுத்துக் காட்டுகிறார்கள்.

சமையலுக்கு அணுசக்தி மின்சாரம்

நியூயார்க், ஜூலை 22—

அணுசக்தியினால் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தை வரலாற்றிலேயே முதன் முறையாக சமையல் வேலைக்கு உபயோகித்த பெருமை குமாரி கதி நோரிஸ் எனும் பெண்மணியைச் சேரும். அணுசக்தியினால் உற்பத்தி செய்த மின்சாரத்தை உபயோகத்திற்குக் கொண்டுவரும் ஆரம்ப விழாவை ஒட்டி இந்தச் சமையல் நடைபெற்றதென்றும், அந்த உணவைச் சாப்பிட்டவர்கள் உணவு ருசியாக இருந்ததாயும், ஆனால், இந்த விழாவின் முக்கியத்துவமேதான் தங்களுக்கு அதிக பரபரப்பு தந்துள்ளதாயும் கூறப்பட்டது.

அழகுச் செடியாக வளர்த்தனர்—பழத்தை நஞ்செனை வெறுத்தனர்!

கிருமிகளை கொல்லும் மருந்தாகவும் தக்காளி பயன்பட இருக்கிறது!

“மக்களையும், ஆடு-மாடுகளையும், பயிர்-பச்சைகளையும் வருத்துகின்ற சில நோய்களைப் போக்கும் கிருமி கொல்லி மருந்தைத் தக்காளியிலிருந்தும் எடுக்கலாம்,”

என்று, இப்பொழுது ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்திருக்கின்றனர். தக்காளிச் செடி முதன் முதல், தென் அமெரிக்காவில், ஆண்டஸ் மலையில் காடாக வளர்ந்து கிடந்தது; அதனைத் தம் நாட்டுக்குக் கொணர்ந்து அமெரிக்கர், அழகுச் செடியாக வளர்த்தனர்.

மேற்கு வங்க மாநிலத்தின் ரூ. 265 கோடி திட்டம்

4,50,000 பேருக்கு வேலை கிடைக்குமாம்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், மேற்கு வங்க மாநிலத்திற்கான திட்டச் செலவு ரூ. 265-கோடியாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

‘இந்த 265 கோடி ரூபாயும் அகதிகள் புனர் வாழ்விப்பு, நிவாரணத்திற்கென மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்குக் கொடுத்தத் தொகையான 113.6 கோடி ரூபாயைத் தவிர்த்தது,’ என்று மாநில முதலமைச்சர் பி. ஸி. ராய் தெரிவித்திருக்கிறார்.

இந்தத் தொகையில் ரூ. 61-கோடி மட்டுமே சில முக்கியமான தொழில் துறைக்குச் செலவிடப்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

மற்ற முக்கியமான திட்டங்களனைத்தும், மேற்கு வங்க திட்ட அபிவிருத்திக் கார்ப்பொரேஷனால் மேற்கொள்ளப்படும் என்றும், மாநிலத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கி, கிராமாந்திரப் பகுதிகளை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற மாநில சர்க்காரின் திட்டத்தை, மேற்படிக் கார்ப்பொரேஷன் வலியுறுத்துவதாயும், இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால், மாநிலத்தில் குறைந்த பட்சம் 4,50,000 பேர் வேலை பெறுவர் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

மாநில அபிவிருத்திக்கென செலவிட திட்டமிடப்பட்டிருக்கும் தொகையான ரூ. 265 கோடியில் 65 சதவிகிதத் தொகை முழுவதும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், கிராமாந்திர அபிவிருத்திக்காகவும், பாக்கி 31 சதவிகிதத் தொகையும் அபிவிருத்தியடையாத நகர்ப்புறப் பகுதிகளின் அபிவிருத்திக்காகவும் செலவிடப்படும் என்றும் கூறியிருக்கிறார்.

மேற்படி திட்ட வேலைகளுக்குச் செலவிடப்படும் தொகை அதிகப்படுமானால், இருக்கிற நிலைமையைப் பொறுத்தே சர்க்கார் நடந்து கொள்ளும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

“இரண்டாவது திட்டத்தைத் தயாரித்தவர்கள், ஒருபுறம் பெரிய தொழிற்சாலைகள் நிறுவுவதிலும், மற்றொருபுறம் குடிசைக் கைத் தொழில்கள் போன்றவற்றிலும் கவனம் செலுத்தியிருப்பதின் மூலம் ‘நடுத்தர வேலைகள்’ அனைத்தையும் அவர்கள் விட்டு விட்டார்கள்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், வேலையில்லாக் குறைபாட்டை ஓரளவிற்குக் குறைக்கும்; ஆனால், மேற்கு வங்க மாநிலம் மேற்கொண்டுள்ள இத்திட்டத்தால், நடுத்தர, சிறு ரகக் கைத் தொழில்கள் அபிவிருத்திக்குப் பெரிதும் உதவுவதுடன், அத்தொழில் பற்றித் தெரியாதவர்களும் பயிற்சி பெற்று, வேலையும் பெறுவர் என்றும், மேற்கு வங்கத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு எதிர்மாறானது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

1820-ம் ஆண்டு வரை அவர்கள், தக்காளிப் பழத்தை நஞ்சு என்றே கருதினர்.

இன்று அமெரிக்காவில் அபரிமிதமாக விளையும் காய்கறிகளில் தக்காளி மூன்றாவதாக விளங்குகிறது; மற்ற நாடுகளிலும் தக்காளி பிரபலமாகியுள்ளது.

இன்று, அமெரிக்க விவசாய இலாகா. விஞ்ஞானிகளின் ஆராய்ச்சியால், தக்காளி, மருந்தாக உதவும் செடியாகப் போகிறது; கிருமி கொல்லி மருந்துக்குத் தக்காளிச் செடி ஆதாரமாகியிருக்கிறது.

‘புசேரியம்’ என்னும் ஒருவகை ‘பூசணம்’: பிடிக்கவொட்டாதபடி தடுக்கும் கிருமி கொல்லிச் சத்தொன்று தக்காளியின் தண்டிலிருந்தும், இலையிலிருந்தும் கிடைத்துள்ளதென்று அமெரிக்க விவசாய இலாகா விஞ்ஞானிகள் அண்மையில் தெரிவித்தனர். இந்தப் பூசணந்தான் தக்காளி முதலிய பயிர்வகைகளை அழித்துப் பெருஞ் சேதம் விளைவிப்பது. இதனை ஒழிக்கும் கிருமி கொல்லிச் சத்துக்கு ‘டொமாட்டைன்’ அல்லது ‘டொமாட்டின்’ என்று பெயர் கூறுகின்றனர்; அந்தப் ‘பூசணம்’ பற்றாத தக்காளிச் செடியிலெல்லாம் இந்தச் சத்து இருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இச்சத்தைப் பற்றி ஆராய்ந்தவர்கள் முதன் முதல் பூசணத்தை ஒழிப்பதற்கே வழி தேடினர். பின்னர் நடந்த ஆராய்ச்சிகளால், மனிதருக்கும், கன்று காலிகளுக்கும் சில நோய்களை உண்டாக்கும் பூசணங்களையும் ‘டொமாட்டி’னால் தடுக்கலாம் என்று தெரியவந்தது. சரும வியாதிகள், கடுமையான சில உள் வியாதிகள் இவற்றை உண்டுபண்ணும் பூசணங்களை பரிசோதனைக் குழாய்களில் வளர்த்து, ‘டொமாட்டினை’ப் பிரயோகித்துப் பார்த்ததில், அப்பூசணங்களை இச் சத்து வேகமாகத் தாக்குகிறது என்று தெரிய வந்தது.

‘டொமாட்டி’னால் செய்த களிம்பு, பூசணங்களால் உண்டாகும் சரும வியாதிகளைக் குணமாக்க மிகவும் சிறந்த மருந்தாக உள்ளது. அம்மருந்தைப் பொடியாகவும் பயன்படுத்தலாம். இம்மருந்து நாற்றமற்றது; அதனால் எரிச்சல் ஏற்படுவதுமில்லை.

‘டொமாட்டி’னைக் கொண்டு அமெரிக்க விவசாய இலாகா விஞ்ஞானிகள், புதிய இரசாயனப் பொருள் ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்; அதற்கு ‘டொமாட்டிடைன்’ என்று பெயரிட்டுள்ளனர். பின்னர் நடந்த ஆராய்ச்சிகளால், ‘கார்ட்டிசோன்’ என்னும் மருந்துசெய்ய ‘டொமாட்டிடைன்’ உபயோகமாகும் என்பது தெரிந்தது. கீல் வாதம் முதலிய நோய்களைத் தீர்க்கக் ‘கார்ட்டிசோன்’ அருமருந்தாகும்.

‘டொமாட்டின்’ எடுப்பதற்குத் தக்க முறையில் தக்காளியைப் பெருவாரியாகப் பயிர் செய்து விற்கலாம் என்பதும் ஆராய்ச்சியால் தெரிகிறது.

‘டொமாட்டிடைனின்’ இரசாயன அமைப்பைப் பற்றிய ஆராய்ச்சியெல்லாம் அநேகமாக முடிந்துவிட்டது. அமெரிக்க விஞ்ஞானிகள் அதன் அமைப்பைக் காணும்போது, அதுபோன்ற வேறு 20 இரசாயனப் பொருள்களைத் தயார் செய்தனர்; அவையும் பிணி போக்குவதற்குப் பெரிதும் உதவக் கூடும் எனத் தெரிகிறது.

இந்தியாவுக்கும் மற்ற நாடுகளுக்கும் இடையே ஏற்படும் எல்லா ஒப்பந்தங்களும் இந்தியில் கையெழுத்தாகுமாம்.

இந்தியைத் திணிக்கும் நோக்கம் இல்லையாம்!

உள்நாட்டு அமைச்சர் பந்த் உரைக்கிறார்

“ இந்தி மொழி பற்றிய சர்க்காரின் கொள்கை, ஒருமுறைக்குப் பலமுறையாக விளக்கிக் கூறப்பட்டுள்ளது ; எந்த மக்கவிடத்திலுமே இந்தி மொழியைத் திணிக்க வேண்டும் என்ற நோக்கம் சர்க்காருக்குக் கிடையாது ; ஆனால், இந்திய அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ளவற்றை நிறைவேற்றுவதில், இந்தியாவின் எப்பகுதியிலுமிருக்கும் மக்களும் தங்கள் தங்கள் ஒத்துழைப்பைத் தர வேண்டுமென்றே எதிர்பார்க்கப்படுகிறது ; இந்தப் பிரச்சினையில் தவருன கருத்துக்கள் கற்பிக்கப்படுவதற்கு இடமே இல்லை,”

—என்று, இந்திய சர்க்கார் உள்நாட்டு அமைச்சர் பண்டித பந்த் கூறியிருக்கிறார்.

★

கொடிஎரிக்கப்பட்டால்

தக்க நடவடிக்கை எடுக்கப்படுமாம்

புதுடில்லி—

“ எந்த வகையிலும் இந்திமொழிக்கும், தேசியக் கொடிக்கும் தொடர்பே இல்லை ; தேசியக் கொடிக்கு எந்த வகையிலும் அவமரியாதை விளைவிக்கப்பட்டால், அது, சட்டப்படி, சர்க்காருக்கு எதிராகச் செய்யும் ‘இராஜத் துரோக’மாகும் ; தேசியக் கொடியைக் கொளுத்தும் அளவிற்கு நாட்டுப் பற்றற்றவர்கள் இருக்கமாட்டார்கள் என்றே நான் நம்புகிறேன்,”

என்று, இந்திய சர்க்கார் உள்நாட்டமைச்சர் பண்டித பந்த், திராவிடக் கழகத்தவரின் கொடி எரிப்புப் போராட்டம் குறித்து, சென்னை ‘மெயில்’ இதழ் நிருபருக்களித்த பேட்டி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

“சர்க்கார், இது விஷயத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்கும்” என்றும் அமைச்சர் பந்த் கூறியிருக்கிறார்.

★

‘கொடியை எரிக்க அனுமதிக்க முடியாது’

மதுரை—

“ தேசியக் கொடி புனிதத்தன்மை வாய்ந்ததாகும் ; அந்தப் புனிதத் தன்மை வாய்ந்த தேசியக் கொடியைப் பெறுவதற்காக இந்தியா கடந்த பல்லாண்டுகளாகப் போராடியிருக்கிறது ; அத்தகைய கொடி எரிக்கப்படுவதான செயல் அனுமதிக்கப்பட முடியாத செயலாகும்,”

என்று, சென்னை மாநில கவர்னர் பிரகாசா, கொடிஎரிப்புப் போராட்டம் குறித்துக் கருத்தறிவித்திருக்கிறார்.

“ ‘தென்னாட்டில் இந்தி கட்டாய மொழியாகப் புகுத்தப்பட மாட்டாது’ என்று இந்திய சர்க்கார் தெரிவித்தால் போதும் ; போராட்டத்தை நிறுத்திவிடத் தயார்,”

என்று, பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் தெரிவித்திருப்பது பற்றிக் கேட்கப்பட்டபோது, கவர்னர் சொன்னார் :

“தேசியக் கொடி எரித்தல், இந்தி மொழி ஆகிய இரண்டு பிரச்சினைகளைப் பொறுத்த வரையில் ‘பேரம்’ பேசுவதற்கான இடமே இல்லை.”

“ எனினும், கழகத்தவர், இப்பிரச்சினையில் நல்ல முடிவுக்கு வருவார்கள் என நம்புகிறேன்,” என்றும் அவர் மேலும் குறிப்பிட்டிருக்கிறார்.

முதல் ஐந்தாண்டுத்...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பாசனத் திட்டங்களின் மூலம் அதிகப்படியாக பாசன வசதி ;

1. நடப்பு திட்ட கால வரையறைக்குள் (அதாவது 1956 மார்ச் மாதத்துக்குள்) 70 லட்சம் ஏக்கராக்களுக்கும் ;

2. இரண்டாவது திட்ட காலத்துக்குள் (அதாவது 1961-ம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள்) 80 லட்சம் ஏக்கராக்களுக்கும் ;

3. 1961-ம் ஆண்டுக்குப் பின்னர் மேலும் 70 லட்சம் ஏக்கராக்களுக்கும்—ஆகமொத்தம் 220 லட்சம் ஏக்கராக்களுக்கு கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் சம்பந்தப்பட்ட மட்டில், நடப்புத் திட்டத்தின்படி 1956-ம் ஆண்டு மார்ச் மாதம் முடிவுக்குள், இவற்றின் மூலம் அதிகப்படியாகப் பாசன வசதி 112 லட்சம் ஏக்கராக்களுக்குக் கிடைக்கவேண்டும் ; ஆனால், 1956 — மார்ச்சுக்குள் உண்மையில் 90 லட்சம் ஏக்கராக்களுக்கு அதிகப்படி பாசன வசதி கிடைத்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பெரிய, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள்

ஐந்தாண்டுத் திட்டத்தில், பெரிய, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் முக்கியத்துவம், இடம் பற்றி அடிக்கடி கேள்விகள் எழுப்பப்படுகின்றன. பெரிய திட்டங்களுக்கும், சிறிய திட்டங்களுக்கும் எவ்விதத் தகராறும் கிடையாது. நாட்டின் சில பகுதிகளில்தான் பெரிய பாசனத் திட்டங்களுக்கு வழியிருக்கிறது ; வேறு சில இடங்களில் சிறிய பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதற்குத்தான் வாய்ப்புகளுள்ளன. எனவே, அந்தந்தப் பிரதேசத்திற்கேற்ற திட்டங்கள் அங்கங்கே மேற்கொள்ளப்படுகின்றன. ஆகையினால் பெரிய திட்டங்கள், சிறிய திட்டங்கள் ஆகியவைகள் ஒன்றுக்கொன்று அனுசரணையாக இருப்பவைகளேயன்றி, ஒன்றேடொன்று போட்டி போடுபவைகளல்ல

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், ஒவ்வொரு திட்டத்துக்கும் ரூ. 5 கோடிக்கு மேல் செலவாகக் கூடிய பாசனத் திட்டங்கள் 13-ம், ஒரு கோடி ரூபாய் முதல் 5 கோடி ரூபாய் வரை செலவாகக்கூடிய திட்டங்கள் 19-ம், 50 லட்சம் ரூபாய் முதல் ஒரு கோடி ரூபாய் வரை செலவாகக்கூடிய திட்டங்கள் 20-ம், ரூ. 10 லட்சம் முதல் ரூ. 50 லட்சம் வரை செலவாகக்கூடிய திட்டங்கள் 42-ம், ரூ. 10 லட்சத்துக்கும் குறைவாகச் செலவாகும் வேறு பல திட்டங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

பின்னர், பற்றுக்குறைப் பிரதேச ஏற்பாடு, திட்டத்தில் சரிக்கட்டுவதற்கான காரியங்கள் ஆகியவற்றின்படி சுமார் 190 நீர்ப்பாசனத் திட்டங்கள் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. இவற்றில், ரூ. 1 கோடி முதல் ரூ. 5 கோடி வரை செலவாகக்கூடிய திட்டங்கள் 9-ம், ரூ. 50 லட்சம் முதல் ரூ. 1 கோடி வரை செலவாகக் கூடிய திட்டங்கள் 9-ம், ரூ. 10 லட்சம் முதல் ரூ. 50 லட்சத்துக்குள் செலவாகக்கூடிய திட்டங்கள் 55-ம், பாக்கியுள்ளவைகள் ரூ. 10 லட்சத்துக்குட்பட்டு செலவாகக் கூடியவைகளாகவும் இருக்கின்றன.

இதிலிருந்து முதல் திட்டத்தில் நடுத்தரமானதும், சிறியதுமான திட்டங்கள் கணிசமான அளவு சேர்க்கப்பட்டிருக்கின்றனவென்பது நன்கு தெரியவரும். இது தவிர, விவசாயத் திட்டத்தின் கீழ், சுமார் ரூ. 115 கோடி செலவாகக் கூடியதும், 112 லட்சம் ஏக்கராவுக்குப் பாசன வசதியளிக்கக் கூடியதுமான சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள், குழாய்க் கிணறு வேலைகள் உள்ளன ; இத்திட்டங்களெல்லாம் அனேகமாக ரூ. 10 லட்சத்துக்கும் குறைவாக செலவு ஆகும் சிறிய திட்டங்களைச் சார்ந்தவைகள். இதற்கு முன் கூறியுள்ளது போல், இந்தச் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் மூலம் 1956 மார்ச் மாத முடிவுக்குள் அதிகப்படியாக 90 லட்சம் ஏக்கராக்களுக்குப் பாசன வசதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கழகக் கூட்டம்

★

சென்னை (வண்ணை)

கார்ப்பொரேஷன் பிரசவ விடுதி பின்பக்கமுள்ள லாலா குண்ட திடலில்

26—7—55 மாலை 6-மணிக்கு

தலைவர் : இரா. இளந்தேன்றல்

பேசுபவர்:

சி. பி. சிற்றரசு

சத்தியவாணிமுத்து

அணுசக்தி கண்காட்சி

சென்னையில் நடைபெறுகிறது

சமாதான காலத்தில் ஆக்க வேலைக்கு அணுசக்தியைப் பயன்படுத்துவதைக் காட்டும் கண்காட்சியை, சென்னை, ராஜாஜி மண்டபத்தில் 23-ந் தேதி மாலை சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் ஏ. லட்சுமணசாமி திறந்து வைத்தார் ; அமெரிக்க கான்சல்-ஜெனரல் ஹென்றி சி. ராம்சே தலைமை தாங்கினார்.

அணுசக்தியை வருங்காலத்தில் ஆக்க வேலைக்குப் பயன்படுத்துவது பற்றிய அமெரிக்காவின் கொள்கையையும், நம்பிக்கையையும் உலகத்திலுள்ள மக்களுக்கு விளக்கிக் காட்டுவதே இந்த ‘அணுசக்தி கண்காட்சி’யின் நோக்கம். இந்த மாபெரும் புதிய சக்தியின் தத்துவங்களையும், அதனால் ஏற்படக் கூடியவைகளையும் எல்லா மக்களும் அறிந்துகொள்ள வேண்டும் என்று கருதியே இக்கண்காட்சி அமைக்கப் பெற்றுள்ளது

ஜூலை 24-ந் தேதி ஆரம்பமான இக்கண்காட்சியை ஆக 8-ந் தேதி வரை மாலை 6 மணி முதல் 8 மணி வரை பொதுமக்கள் பார்க்கலாம் ; ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 10 மணி முதல் மாலை 8 மணி வரை பார்க்கலாம் ; அணுசக்தியின் அமைதிக் காலத்துப் பயன்களைக் காட்டும் திரைப்படக் காட்சி நாள்தோறும் காட்டப்படும்.

10-லட்சம் தாழ்த்தப்பட்டோர்

கிறித்துவர்களாக மாற்றப்பட்டனராம்!

ஐதராபாத் நிலை குறித்து தகவல்

ஐதராபாத் மாநிலத்தில் கடந்த சமீப காலத்தில் 10 லட்சம் தாழ்த்தப்பட்டவர்கள் கிறித்துவ மதத்திற்கு மாற்றப்பட்டிருப்பதாக ஐதராபாத் வட்டார தாழ்த்தப்பட்டோர் வகுப்பு சம்மேளனத் தலைவர் ஜே எச். கிருஷ்ணமூர்த்தி என்பார், பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

“ தீண்டாமை ஒழிப்புக்காக இந்திய சர்க்கார் கோடிக் கணக்கான ரூபாய் செலவிடுகிறது ; மனமாறுதல் மூலமே, அத்தீமையை ஒழிக்க முடியும் ; இந்தத் தொகையை தாழ்த்தப்பட்டவர்களுக்கு குடியிருப்பு காலனிகள் கட்டவும், தொழில்களை ஆரம்பித்துக் கொடுக்கவும் பயன்படுத்தலாம்,”

என்றும், கிருஷ்ணமூர்த்தி தெரிவித்திருக்கிறார்.

சென்னை சர்க்கார் எழுப்பும் கடன்

4 சதவிகித வட்டி தந்து ரூ. 7 கோடி வசூலிக்க முயற்சி

சென்னை, ஜூலை 25—

சென்னை மாநில சர்க்கார், ஆகஸ்டு திங்களில் ரூ. 7 கோடிக்குக் கடன் பத்திரங்கள் வெளியிட முடிவு செய்திருக்கிறது.

இந்தக் கடன் 12 ஆண்டுகள் தவணையுடையதாம் — அதாவது, இப்போது இந்தக் கடன் பத்திரங்களை வாங்குவோர் 1967 செப்டம்பரில் திரும்பப் பெறலாம்.

கடனுக்கு வட்டி 4 சத விகிதம் தரப்படுமாம்.

கடன் வெளியீட்டு விலை ரூ 100-க்கு ரூ 99—12—0 ஆகும்.

ஆகஸ்டு 15-ந் தேதியிலிருந்து ஆகஸ்டு 31-ந் தேதி வரை இதற்குப் பணம் செலுத்தலாம்.

வசூலானதில், சுமார் ரூ 770 லட்சம் போக எஞ்சியுள்ளது திருப்பிக் கொடுத்துவிடப்படும்.

இந்தக் கடன் வெளியீட்டின் மூலம், கிடைக்கும் தொகையில் இப்போது மீட்கவேண்டிய 1955ம் ஆண்டு 3 சதவிகித சென்னை சர்க்கார் கடனுக்கு செலுத்த வேண்டியது போக, எஞ்சியதை, மின்சார உற்பத்தியை விரிவாக்கும் திட்டங்களுக்காகவும், பூரணமாக — முதலீட்டிற்கேற்ற வருமானம் தரக் கூடியதாகவும், நேரில் சர்க்காருக்கு இலாபம் கிடைக்காவிடினும், மறைமுகமாகவும் நன்மை பயக்கக் கூடியதாகவுமுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களுக்காகவும் முதலீடாகச் செலவிடப்படுவதே கடன் எழுப்புவதன் நோக்கம் என்று கூறப்படுகிறது.

★

மற்ற · மாநிலங்களில் !

ஆந்திரம் :

ஆந்திர சர்க்கார் ரூ. 2½ கோடி கடன் எழுப்புவதாக அறிவித்திருக்கிறது.

ஆந்திர சர்க்காரின் அபிவிருத்தித் திட்டங்களுக்காக எழுப்பப்படும் இக்கடனுக்கு 4 சதவிகித வட்டி கிடைக்கும் என்றும், 1967-ல் இக்கடன் திருப்பித் தரப்படும் என்றும், ஆகஸ்டு 16-ந் தேதி முதல் 31-ந் தேதி வரை கடன் பத்திரங்கள் தரப்படும் என்றும் கூறப்படுகிறது.

ஐதராபாத் :

ரூ. 2 கோடி கடன் எழுப்புவதாக ஐதராபாத் சர்க்கார் அறிவித்திருக்கிறது இந்த 12 ஆண்டு கடனுக்கு 4 சத விகிதம் வட்டி தரப்படும்.

பம்பாய் :

ரூ. 6 கோடி கடன் எழுப்புவதாக பம்பாய் மாநில சர்க்கார் அறிவித்திருக்கிறது.

இந்தக்கடன் 12 ஆண்டு தவணையும், 4 சத விகித வட்டியும் கொண்டது.

மேற்கு வங்கம் :

நாலு சதவிகித வட்டியில் மேற்கு வங்க மாநில சர்க்காரும் ரூ. 5 கோடி கடன் எழுப்புவதாக அறிவித்திருக்கிறது.

ஜமீன்தார்களுக்கு நஷ்டஈடு தரவும், அபிவிருத்தித் திட்டங்களுக்காகவும் செலவிடப்படும் என்று தெரிகிறது.

தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம்

ஆகஸ்டு 1-ந் தேதியன்று கிளர்ச்சியில் ஈடுபடும்

சென்னை, ஜூலை 25—

இந்திய அரசியல் சட்டப்படி தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற உரிமைகள், சலுகைகள் ஆகியவற்றைப் பாதுகாக்க அரசியலார் தவறிவிட்டதாகக் கூறி, அதனைக் கண்டிக்கும் நோக்குடன், சென்னை தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத் தவர். சென்னை சட்டசபை முன், ஆகஸ்டு முதல் தேதியிலிருந்து கிளர்ச்சியில் ஈடுபடுவதெனநேற்று நடைபெற்ற சம்மேளன மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது

★

சென்னை நகரில் தடை உத்தரவு

சென்னை சட்டசபை, மேல்சபை கூட்டங்கள் நடைபெறும் காலத்தில்—ஆகஸ்டு 1-ந் தேதி முதல் 21-ந் தேதி முடிய—சட்டசபைக் கட்டிடங்களைச் சுற்றியும் கூட்டங்களோ, ஊர்வலங்களோ நடத்தக் கூடாதென சென்னை நகர போலீஸ் சட்டம் 41-ம் பிரிவின்படி தடைவிதித்து சென்னை போலீஸ் கமிஷனர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சட்டசபை நடைபெறுங்காலத்தில், சட்டசபை முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தும் நோக்கத்துடன் கூட்டங்களும், ஊர்வலங்களும் நடத்தப்படலாம் என்ற தகவலின் பேரிலேயே தாம் தடையுத்தரவு பிறப்பிப்பதாக கமிஷனரின் உத்தரவு கூறுகிறது.

கள்ளத்தனமாக கஞ்சா கடத்தியவர் கைது

மதுரை, ஜூலை 24—

இரயில்வே இலாகா உதவி மந்திரி அளகேசன் அண்மையில் மதுரைக்கு வந்தபோது அன்னாருக்கு தேனீர் விருந்து வைபவம் நடத்திய மதுரை நகர ‘பிரபல’ காங்கிரஸ்காரர் என்று கூறப்படுகிற ஒருவர், கள்ளத்தனமாக கஞ்சா கடத்தும் வேலையில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டிருக்கிறார்.

அப்துல் சுபான் என்ற அந்த புதுக் காங்கிரஸ்காரரான அவர் பெங்களூரிலிருந்து ரூ 2,500 பெறுமான கஞ்சாவைக் கடத்தி வருவதாக போலீசார் சந்தேகப்பட்டு, ஜோலார்ப்பேட்டையிலிருந்து போலீசாரால் பின் தொடரப்பட்டு, சேலம் ஜங்ஷனில் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

20-ந் தேதி சேலத்தில் கைதான அவர், இரண்டு நாள் காவலில் வைக்கப்பட்ட பின், நீதிபதி முன் நிறுத்தப்பட்டிருக்கிறாராம்.

ஜாமீனில் வெளிவந்துள்ள அவர் மீது வழக்குப் பதிவாகி விசாரணை 29-ந் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறதாம்.

நிர்வாணமாகத் திரிந்த ஜைன சாமி

போலீஸ் விசாரணையில் நீதிபதி தீர்ப்பு

கோலாப்பூர், ஜூலை 21

இங்குள்ள பொது இடங்களில் ஆடைகள் எதுவும் உடுத்தாமல் நிர்வாணமாகச் சென்றுகொண்டிருந்த ஜைன மதத்தைச் சேர்ந்த ஒரு சாது, போலீசாரால், நீதிபதி முன்னர் விசாரணைக்காக நிறுத்தப்பட்டார்.

விசாரணையின்போது, நீதிபதி, மதக் கோட்பாடுகளின்படி நடந்துகொள்ள சட்டம் இடந்தருகிறது என்றும், எனவே ஜைன மதக் கோட்பாடுகளிலுள்ள விசுவாசத்தின் காரணமாக அந்தச் சாது அவ்வாறு நடந்துகொள்வதைக் கண்டிக்க முடியாது என்றும் கூறி அவரை விடுதலை செய்திருக்கிறார் !

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.